ஸ்ரீ:
ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகாய நம:
சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ தேசிக ப்ரபந்தம்

சீரொன்று தூப்புல் திருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

16.1: (இரண்டு முறை சேவிக்கவும்)

அருள் தரும் அடியர் பால் மெய்யை வைத்துத்*
தெருள் தர நின்ற தெய்வநாயக* நின்-
அருளெனும் சீரோர் இவையானதென*
இருள்செக எமக்கோர் இன்னொளி விளக்காய்*
மணிவரை அன்ன, நின் திரு உருவில்*
அணியமராகத் தலங்கலாயிலங்கி* (முதல் கோஷ்டி)
நின்படிக் கெல்லாம் தன்படி யேற்க*
அன்புடன் நின்னோடு அவதரித் தருளி*
வேண்டுரை கேட்டு மீண்டவை கேட்பித்து*
ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று*
தன்னடி சேர்ந்த தமருனை அணுக*
நின்னுடன் சேர்ந்து நிற்குநின் திருவே. **

16.2:
திருமால் அடியவர்க்கு மெய்யனார்*, செய்ய-
திருமாமகள் என்றுஞ்சேரும்* திருமார்பில்-
இன்மணிக்கோவை* உடன் ஏற்கின்றார்* என்றனிம்-
மும்மணிக்கோவை மொழி.

16.3:
மொழிவார் மொழிவனமும்* மறையாகும் அயிந்தையில்வந்து*
இழிவார் இழிகவென்று* இன்னமுதக் கடலாகிநின்ற*
விழிவாரருள் மெய்யர்* மெல்லடி வேண்டிய மெல்லியல்மேல்*
பொழிவார் அனங்கர்* தம் பூங்கரும்புந்திய பூமழையே.

16.4:
மழையில் எழுந்த மொக்குள்போல் வையம்*
அழிய ஒன்றழியா அடியவர் மெய்ய*
அருமறையின் பொருள் ஆய்ந்து எடுக்குங்கால்*
திருவுடன் அமர்ந்த தெய்வ நாயக*
நின் திருத்தனக்கு நீ திருவாகி*
இந்து தன் நிலவுடன் இலங்கு தன்மையினை*
நந்துதல் இல்லா நல்விளக்காகி*
அந்தமில் அமுத ஆழியாய் நிற்றி*
பாற்கடல் தன்னில் பன்மணியன்ன*
சீர்க்கணஞ் சேர்ந்த சீலமெல்லையிலை*
அடியவர் பிழைகள் நின் கருத்தடையாது*
அடைய ஆண்டருளும் அரசனும் நீயே*

உயர்ந்த நீ உன்னை எம்முடன் கலந்தனை*
அயிந்தை மாநகரில் அமர்ந்தனை எமக்காய்*
சித்திர மணியெனத் திகழு மன்னுருவில்*
அத்திர மணியென அனைத்து நீயணிதி*
விண்ணுள் அமர்ந்த வியனுருவதனால்*
எண்ணிய ஈரிரண்டு உருக்களும் அடைதி* (முதல் கோஷ்டி)
பன்னிரு நாமம் பலபல உருவாய்*
இன்னுரு எங்கும் எய்தி நீ நிற்றி*
மீனோடு ஆமை கேழல் கோளரியாய்*
வானோர் குறளாய் மழுப்படை முனியாய்*
பின்னும் இராமர் இருவராய்ப் பாரில்*
துன்னிய பரந்தீர் துவரை மன்னனுமாய்*
கலி தவிர்த்து அருளும் கற்கியாய் மற்றும்*
மலிவதற்கு எண்ணும் வல்வினை மாற்ற*
நானா உருவங் கொண்டு நல்லடியோர்*
வானார் இன்பம் இங்குற வருதி*
ஓருயிருலகுக் கென்னு நீ திருவோடு*
ஏருயிர் எல்லாம் ஏந்தி இன்புறுதி*
யாவரும் அறியாது எங்கு நீ கரந்து*
மேவுருச் சூழ்ந்து வியப்பினால் மிகுதி*
கொண்டிட எம்மை அடைக்கலம் உலகில்*
கண்டிலங் கதியுனை யன்றி மற்றொன்றும்*
பல்வகை நின்ற நின்படி அனைத்தினும்*
தொல்வகை காட்டும் துணிந்து தூமறையே.

16.5:
தூமறையினுள்ளம்* துளங்காத் துணிவு தரும்*
ஆமறிவால் ஆர்ந்தடிமை ஆகின்றோம்* பூமறையோன்
பாராயணத்திற்பணியும்* அயிந்தை நகர்*
நாராயணனார்க்கே நாம்.

16.6:
ஆர்குங்கருணை பொழிவான்* அயிந்தையில் வந்தமர்ந்த*
கார்க்கொண்டலைக்கண்ட காதல்* புனமயில் கண்பனியா*
வேர்க்கும் முகிழ்க்கும் விதிர்விதிர்க்கும்* வெள்கிவெவ்வுயிர்க்கும்*
பார்க்கின்றவர்க்கிது* நாமென்கொல் என்று பயிலுவமே.

16.7:
பயின்மதி நீயே* பயின்மதி தருதலின்*
வெளியும் நீயே* வெளியுற நிற்றலின்*
தாயும் நீயே* சாயைதந்துகத்தலின்*
தந்தையும் நீயே* முந்தி நின்றளித்தலின்*
உறவும் நீயே* துறவா தொழிதலின்*
உற்றதும் நீயே* சிற்றின்பம் இன்மையின்*
ஆறும் நீயே* ஆற்றுக்கருள்தலின்*
அறமும் நீயே* மறநிலை மாய்த்தலின்*
துணைவனும் நீயே*இணையிலை ஆதலின்*
துய்யனும் நீயே* செய்யாளுறைதலின்* (முதல் கோஷ்டி)
காரணம் நீயே* நாரணான் ஆதலின்*
கற்பகம் நீயே* நற்பதம் தருதலின்*
இறைவனும் நீயே* குறையொன்றிலாமையின்*
இன்பமும் நீயே* துன்பந்துடைத்தலின்*
யானும் நீயே* என்னுள் உறைதலின்*

எனதும் நீயே* உனதன்றி இன்மையின்*
நல்லாய் நீயே* பொல்லாங்கிலாமையின்*
வல்லாய் நீயே* வையமுண்டுமிழ்தலின்*
எங்ஙனமாகு மெய்ய* நின் வியப்பே*
அங்ஙனேயொக்க* அறிவதாரணமே.

16.8:
ஆரணங்கள்தேட* அயிந்தை நகர்வந்துதித்த*
காரணராய்நின்ற கடல்வண்ணர்* நாரணனார்–
இப்படிக்குமிக்கு அன்றெடுத்த* பாதங்கழுவ*
மெய்ப்படிக்கமானது பொன்வெற்பு.

16.9: (இரண்டு முறை சேவிக்கவும்)

வெற்புடனொன்றி* அயிந்தையில் வெவ்வினை தீர்மருந்தொன்று*
அற்புதமாக அமர்ந்தமை கேட்டு* அருள்வேண்டிநிற்கப்*
பற்பிலமர்ந்தசெய்யாள்* படிகாட்டியபண்புடை* எம்–
விற்புருவக்கொடிக்கு ஓர்* விலங்காமயல்பெற்றனமே.

16.10: (இரண்டு முறை சேவிக்கவும்)

பெற்றனைநீயே* மற்றுளவெல்லாம்*
பெறுவதுநின்னை* உறுவதுகொள்வார்*
நின்னாலன்றி* மன்னாரின்பம்
நின்பொருட்டு நீ* என் பொருட்டிலை* (முதல் கோஷ்டி)
நின்னரு நின்று* மின்னுருத்தோன்றும்*
நின்றனக்கு நிகர்* நின்னடியடைவார்*
நின்பாலன்றி* அன்பாலுய்யார்*
வாரண மழைக்க* வந்த காரணனே.

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

அடிவரவு: அருள்தரும், திருமால், மொழிவார்,
மழை, தூமறை, ஆர்க்கும், பயின்மதி,
ஆரணங்க, வெற்புடன், பெற்றனை, ஒருமதி.